கல்வி அமைச்சகம்
அமைச்சர்
315 Front Street West
Toronto ON  M7A 0B8

**Ministère de l'Éducation**
Ministre
315, rue Front Ouest
Toronto ON  M7A 0B8

Ontario

ஏப்ரல் 28, 2020

அன்பான பெற்றோரே,

நீங்களும், உங்கள் பிள்ளைகள் மற்றும் உங்கள் குடும்பத்தினர் அனைவரும் முன்பொருபோதும் இருந்திராத இந்தக் காலத்தில் பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறீர்கள் என நான் மனமார நம்புகிறேன்.

கடந்த சில வாரங்களாக, தொலைதூரக் கற்றலுக்கு உங்களை மாற்றிக்கொள்ள நீங்களும் உங்கள் பிள்ளைகளும் காட்டிய ஆர்வமும் ஒத்துழைப்பும் எங்களின் அரசாங்கத்தை மிகவும் ஈர்த்துள்ளது. குறிப்பாக கோவிட்-19 உங்கள் வாழ்விலும், வாழ்வாதாரத்திலும் ஏற்படுத்தியுள்ள தீவிரமான தாக்கத்தில் இது அத்தனை சுலபமானதல்ல என்பதை நாங்கள் அறிவோம். எமது மாணவர்களைக் கற்றல் பயணத்தில் தொடர்ந்து ஈடுபடுத்தும் திறன் மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது.

ஒன்ராறியோவின் கல்வி அமைச்சராக, COVID-19இன் தாக்கங்கள் புதிய முன்னேற்றங்கள் மற்றும் குறிப்பாக பிள்ளைப்பராமரிப்பு, தொடக்கக்கல்வி திட்டங்கள் மற்றும் நடப்பு பாடசாலை ஆண்டின் நிலை குறித்து உங்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன். இந்த கடினமான காலகட்டத்தில் எங்களின் அரசாங்கம் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் தொடர்ந்து ஆதரவளிக்கும்.

பிள்ளைகள் மற்றும் மாணவர்கள், அவர்களை வளர்ப்பவர்கள் மற்றும் ஆதரிப்பவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வே எங்களின் அரசின் முன்னுரிமை ஆகும். மீண்டும் பள்ளிக்கூட வகுப்பறை முறையில் கற்றுக்கொள்ள மாணவர்களை வரவேற்பதற்கான எந்தவொரு தெரிவையும் கருத்தில்கொள்வது பற்றிய எங்களின் முடிவுகள், பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் பொதுச் சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதலின் அடிப்படையிலேயே இருக்கும். ஒரு வகுப்பறைக்குள் மீண்டும் நுழைவதற்கு முன்பு மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கான சகல நடவடிக்கைகளும்ம் எடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்கான நிலைப்பாட்டில் நாங்கள் தெளிவாகவும் உறுதியுடனும் இருக்கிறோம்.

அந்தக் கொள்கையை மனதில்கொண்டு, குறைந்தபட்சம் மே 31, 2020வரை மாகாணத்தில் உள்ள அனைத்து பொதுப் பாடசாலைகளும் மூடப்பட வேண்டும் என எங்களின் அரசு உத்தரவிட்டுள்ளது.

ஒன்ராறியோவின் தலைமைச் சுகாதார அலுவலர் மற்றும் கோவிட்-19 நிபுணர் ஆலோசனை கட்டளைக் குழு இந்த முடிவை எங்களுக்கு அறிவுறுத்தியது. பொதுச் சுகாதார வல்லுநர்கள் சமீபத்தில் முன்வைத்த மாதிரிகள் நாங்கள் முன்னேறி வருவதைக் காண்பித்தாலும், கோவிட்-19 எதிரான இந்தப் போராட்டத்தில் மாணவர்கள் பாதுகாப்பாகவும் நம்பிக்கையுடனும் தங்கள் வகுப்பறைகளுக்கு திரும்பமுடியும் என்ற நிலையில் இப்போது நாங்கள் இல்லை.

இந்தச் செய்தி உங்களில் பலருக்கு விரக்தியை உண்டாக்கக்கூடும் என்பதை நான் அறிவேன். ஒன்ராறியோப் பெற்றோரின் பரிவும் அர்ப்பணிப்பும் உறுதியானது. நேரடியான கற்றல் இடைநிறுத்தப்படுவதை மார்ச் 12ஆம் திகதி நாங்கள் அறிவித்ததிலிருந்து, தங்கள் பிள்ளைகளின் கற்றலை தொடர்ந்து எவ்வாறு அவர்கள் ஊக்குவித்து வருகிறார்கள் மற்றும் எவ்வாறு தங்களால் முடிந்ததைச் செய்கிறார்கள் என்பதைப் பற்றி மாகாணத்தில் உள்ள பெற்றோரிடமிருந்து தொடர்ந்து நாங்கள் அறிந்து வருகிறோம். இந்த உலகளாவிய தீவிர நோய்ப்பரவலுக்குப் பிள்ளைகள் தனித்துவமான எதிர்வினைகளைக் காட்டும்வேளையில், பெற்றோர்களும் குடும்பத்தவர்களும் வியக்கத்தக்க வகையில் அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்துவருகின்றனர்.

பாடசாலைகளை மூடத்தொடங்கியதிலிருந்து, தொடர்ந்து கற்றுக்கொள்வதற்கான எங்கள் திட்டம் கணிசமான அளவில் வெற்றிகரமாக மாறிவருகிறது. மிகச் சமீபத்தில், மாகாணத்தில் ஆசிரியரின் வழிநடத்தலிலான கற்றலை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும் மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடர, அவர்களுக்குப் பாடங்களும் அதற்கான வளங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, உங்கள் பிள்ளையின் ஆசிரியரால் வழங்கப்பட்ட கற்றல் பொருட்கள் மற்றும் பாடங்களின் அடிப்படையில், குறிப்பிட்ட வாரத்தில் மாணவர்களின் கற்றல்நேரம் எவ்வளவாக இருக்கவேண்டும் என்பதற்கான எதிர்பார்ப்புகளை நாங்கள் கோடிட்டுக் காட்டியுள்ளோம். தற்போதைய நோயப்பரவலால், மாணவர் எவரும் தங்கள் கல்வியைப் பூர்த்திசெய்வதில் பாதிப்படைய மாட்டார்கள் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கற்பித்தலின் குறைந்தபட்சப் பரிந்துரைக்கப்பட்ட தரநிலையாக பின்வருவனவற்றை எங்களின் அரசு வகுத்துள்ளது:

- மழலையர் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரை: கணிதம் மற்றும் எழுத்தறிவில் கவனம்செலுத்தும் வகையில், மாணவர் ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு ஐந்து மணி நேர வேலை.
- 4 முதல் 6ஆம் வகுப்பு வரை: எழுத்தறிவு, கணிதம், விஞ்ஞானம் மற்றும் சமூக அறிவியலில் கவனம்செலுத்தும் வகையில், வாரத்திற்கு ஐந்து மணிநேரம்.
- 7 முதல் 8ஆம் வகுப்பு வரை: எழுத்தறிவு, கணிதம், விஞ்ஞானம் மற்றும் சமூக அறிவியலில் கவனம்செலுத்தும் வகையில், வாரத்திற்கு பத்து மணிநேரம் மற்றும்,

.../ப3

• 9 முதல் 12ஆம் வகுப்பு வரை: செமஸ்டர் மாணவர்களுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு பாடத்திற்கு மூன்று மணி நேரம், மற்றும் செமஸ்டர் அல்லாத மாணவர்களுக்கு ஒரு பாடத்திற்கு வாரத்திற்கு 1.5 மணிநேர பாடம். இவை credit சேர்ப்பு மற்றும் வகுப்பைப் பூர்த்திசெய்தல் என்பவற்றில் கவனம்செலுத்தும் வகையில் இருக்கும்.

இந்தக் காலகட்டத்தில் கற்றல் அனுபவத்தில் கட்டாயமாக வேறுபாடுகள் இருக்கப்போகின்றன என்பது புரிந்துக்கொள்ளத்தக்கது என்றாலும், அனைத்து மாணவர்களும் அவர்களது ஆசிரியர்கள் மற்றும் பிற கல்விப் பணியாளர்களால் தொடர்ந்து ஆதரிக்கப்படுவதுடன் அவர்களுடன் தொடர்பிலும் இருப்பார்கள் என்பது என்னுடைய எதிர்பார்ப்பு ஆகும். இந்த அசாதாரண சூழ்நிலையில், மாணவர்கள் சிறந்து விளங்குவதற்கும், அவர்களின் அடைவுகளை அடைவதற்குமான வாய்ப்புக்கள் அனைத்தையும் அவர்கள் பெறுவதை உறுதிசெய்யும், பொறுப்பை ஏற்றுக்கொண்ட கல்வியாளர்களுக்கு நாங்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். உங்களுக்கு வழங்கப்பட்ட வேலையின் அளவு குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், அல்லது மேம்பட்ட தொடர்பின் தேவை இருந்தால், பாடசாலை அதிபர் அல்லது பாடசாலைச் சபையை அணுக நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். இந்தத் தொற்றுப்பரவல் காலத்தில் எங்கள் மாணவர்கள் தரமான கற்கும் அனுபவத்தைப் பெறுவதை உறுதிசெய்ய எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய விரும்புகிறோம்.

உங்கள் பிள்ளைகள் கற்கும் நேரத்தை அதிகரிக்க, மீதமுள்ள தொழில்முறைச் செயல்பாடு (PA) மற்றும் பரீட்சைகளுக்கான நாட்களை கற்பிக்கும் நேரமாக மாற்றுகிறோம். இந்தப் பாடசாலை ஆண்டில் உங்கள் பிள்ளைகள் முடியுமான அளவு அதிக எண்ணிக்கையிலான நாட்களை படிப்பில் ஈடுபடுத்திக் கற்றுக்கொள்வதை இது உறுதிசெய்யும். முன்பு எப்போதையும்விட ஒன்று அல்லது இரண்டு நாட்கள் என்றால்கூட, ஒவ்வொரு கற்பித்தல் நேரமும் இப்போது மிகவும் முக்கியமானது.

பாடசாலை மூடப்பட்ட காலத்தில் கற்பித்தல் நேரத்தை வழங்குவதற்கு நாங்கள் முயற்சி செய்கையில், தொழில்நுட்பத்தால் அனைவரும் இணைந்திருக்கும் இந்த டிஜிட்டல்-காலத்தில்கூட, சில மாணவர்களுக்கு வீட்டில் இருந்து Learn at Homeஐ அணுக இணையம் அல்லது அதற்கான தொழில்நுட்ப வசதி இல்லை என்பது பல குடும்பங்கள் சந்திக்கும் சவால்களில் ஒன்றாகும்.

கோவிட்-19 பரவலின் போது மாணவர்கள் மற்றும் குடும்பங்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒன்ராறியோ அரசு, Rogers Communications மற்றும் அப்பிள் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இன்றுவரை, மாணவர் தேவைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியங்கள்

.../ப4

ஊடாக மாகாண அரசால் வழங்கப்பட்ட 75 டாலர் மில்லியனுக்கும் அதிகமான தொகையில் முன்பொருத்தப்பட்ட இலவச Rogers LTE wireless data உடன் 21,000க்கும் மேற்பட்ட iPad சாதனங்கள் பாடசாலைச் சபைகளால் வாங்கப்பட்டு தேவைப்படும் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், அப்பிள் நிறுவனம் பிரெஞ்சு மற்றும் ஆங்கிலத்தில் வீட்டிலிருந்து கற்றல் மற்றும் வேலை செய்வதை ஆதரிப்பதற்கான ஆதாரங்களின் தொகுப்பை ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கித் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. இந்த காலகட்டத்தில் தேவையிருந்த மாணவர்களுக்கு 200,000க்கும் மேற்பட்ட கணினிகள் மற்றும் tablets பாடசாலைச் சபைகளால் இதுவரை வழங்கப்பட்டுள்ளன, அவற்றுடன் இந்த 21,000 சாதனங்கள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளன.

Rogers ஒன்ராறியோப் பாடசாலைச் சபைகளுடன் இணைந்து மானியம் செலுத்தும் வாடகைதாரர்களுக்கும், ஒன்ராறியோ முழுவதிலும் உள்ள அரச குடியிருப்புப் பங்குதாரர்களுக்கும் அதன் "Connected for Success" மூலமும் கனடா அரசாங்கத்தின் "Connecting Families (குடும்பங்களை இணைத்தல்) முன்முயற்சி" மூலமும் அதிவேக, குறைந்த கட்டண இணையத்தை வழங்குவதற்காகப் பணியாற்றி வருகிறது.

பாடசாலைச் சபைகளுக்கும் Rogers Communications மற்றும் அப்பிள் போன்ற தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் இடையில் உள்ள இதைப் போன்ற கூட்டாண்மைகள், ஒன்ராறியோவின் அர்ப்பணிப்பை உண்மையிலேயே சுட்டிக்காட்டுகின்றன .

நடப்புப் பாடசாலை ஆண்டில் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் நாங்கள் உறுதியாக இருக்கும் அதே நேரத்தில், எங்களின் அரசாங்கம் ஏற்கனவே 2020-2021 பாடசாலை ஆண்டுக்கான திட்டங்களையும் தொடங்கியுள்ளது. இந்தப் பாடசாலை ஆண்டு நிச்சயமாக நாங்கள் முன்பு பார்த்த எதையும் போலல்லாமல் இருந்தபோதிலும், செப்ரெம்பர் மாதத்தில் பாடசாலைகள் திறக்கும்போது, மீண்டும் இதைப் போலத் தோற்றமளிக்கவோ உணரப்படவோ கூடாது என்பதற்கு எங்களை நாங்கள் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

எங்கள் வழிகாட்டும் கொள்கையின்படி உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வைக் கருத்தில்கொண்டு, மாணவர்கள் மற்றும் சிறுபிள்ளைகள் மீண்டும் அவர்களின் வகுப்புக்குத் திரும்பத் தயாராகும்போது, அவர்களை வரவேற்க முதல், பாடசாலைகள், பிள்ளைப் பராமரிப்பு மையங்கள் மற்றும் பாடசாலைப் பேருந்துகள் ஆகியவை முழுமையாகச் சுத்தம்செய்யப்படும் என நான் உங்களுக்கு உறுதிகூறுகிறேன். இந்த நீண்டகால மூடலுக்குப் பின்னர் மிகக் குறைந்த அளவிலேயே தொடுகைக்கான ஆபத்து இருக்கும் என்ற போதிலும், மாணவர்கள் அனைவரும் பாதுகாப்பாகவும் நம்பிக்கையுடனும் மீண்டும் பாடசாலைக்குத் திரும்பவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

.../ப5

கற்பித்தலின் அடிப்படையில், விரிவாக்கப்பட்ட கோடைகாலக் கற்றல் திட்டத்திற்கான எங்கள் முன்மொழியப்பட்ட திட்டத்தை நாங்கள் வெளியிடுவோம், மாணவர்கள் விரும்பும் பட்சத்தில், கோடைகாலத்தில் அவர்களின் கற்றலைத் தொடர்வதற்கு இது உதவும். 100,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பொதுவாக கோடைகாலக் கற்றலில் பங்கேற்கும்போது, இந்தப் பாடசாலை ஆண்டு முறையாக முடிந்தபின்னர், இன்னும் பல மாணவர்கள் தங்களின் ஆசிரியர் வழிநடத்தலிலான கற்றலைத் தொடர விரும்பலாமென்பதை நாங்கள் அறிவோம். விரிவாக்கப்பட்ட கோடைகாலக் கற்றலுக்கான இந்த முன்மொழியப்பட்ட திட்டம், credit மீட்பு, பாடநெறிகளை மேம்படுத்துவதற்கான புதிய தெரிவு மற்றும் பாதிக்கப்படக்கூடிய மாணவர்களுக்கான கற்றல் இடைவெளிகளை நிரப்பும் திட்டங்கள் மற்றும் ஆதரவுகள் ஆகியவற்றில் கவனம்செலுத்தும்.

கோவிட்-19 பரவலால் பிள்ளைகளுக்குச் சங்கடமான நேரங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை எங்கள் அரசு புரிந்துகொள்கிறது. துயரத்தின் உடனடி அறிகுறிகள் இருக்காவிட்டாலும்கூட, அனைத்து மாணவர்களின் உணர்வுரீதியான மற்றும் மனநலத் தேவைகளில் நாங்கள் தொடர்ந்து கவனம்செலுத்த வேண்டும்.

அதற்காக, மனநல ஆலோசகர்கள் மற்றும் தொழில்முறை ஊழியர்கள் தேவைக்கேற்ப மாணவர்களுடன் பத்திரமான மற்றும் பாதுகாப்பான உரையாடலில் உடனடியாக ஈடுபடுவதை உறுதிசெய்யுமாறு பாடசாலைச் சபைகளுக்கு எங்கள் அரசு அறிவுறுத்தியுள்ளது. மனநலப் பிரச்சனைகள் அல்லது துயரங்களை எதிர்கொள்ளும் பிள்ளைகளுக்கு உடனடியாகத் தேவைப்படும் ஆதரவை வழங்கும் பல நிறுவனங்கள் உள்ளன என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். எடுத்துக்காட்டாக, மாகாணம் முழுவதும் Kids Help Phone (சிறுவர்கள் உதவி தொலைபேசி) 24/7 ஆலோசனை மற்றும் பரிந்துரைப்புச் சேவைகளை வழங்குகிறது. இந்த இலவச சேவையைப் பயன்படுத்த, 1-800-668-6868 இலக்கத்தைப் பிள்ளைகள் அழைக்கலாம் அல்லது 686868க்கு CONNECT என செய்தி அனுப்பலாம்.

பிள்ளைப்பராமரிப்பு மையங்கள் மற்றும் EarlyON பிள்ளை மற்றும் குடும்பத் திட்டங்கள் அனைத்தும் மே 6, 2020வரை தொடர்ந்து மூடப்பட்டு இருக்கும். மீண்டும் திறப்பது குறித்து நாங்கள் முடிவுகளை எடுக்கும்போது உங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியமும் பாதுகாப்பும் மிக முக்கியமாக இருக்கும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். மேலும் ஒன்ராறியோவின் பரவல் குறித்த பதிலளிப்பு மற்றும் மீட்சித் திட்டத்துக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம்.

இந்தப் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொண்டு, தொடர்ந்து மாணவர்களுக்கு கற்பித்தல் மற்றும் தேவையான ஆதரவுகளை தங்களால் முடிந்த அளவில்

.../ப6

சிறந்த முறையில் வழங்கிவரும் ஆசிரியர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். எங்கள் பிள்ளைப் பராமரிப்பு மற்றும் கல்வி முறைகளில் "புதிய இயல்பு" எப்படி இருக்கும் என்பதற்கு எங்களால் உத்தரவாதம் அளிக்கமுடியாது என்றாலும், இது எங்களின் பிள்ளைகள் மற்றும் மாணவர்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துகிறதா என்ற கேள்விக்கு "ஆம்" என்று பதிலளிக்காத எந்த முடிவும் எடுக்கப்படமாட்டாது என்பதற்கு நான் உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறேன்.

இதனைவிட எளிமையான வேறு எந்தக் கேள்வியோ– பதிலோ – முக்கியமல்ல.

பாதுகாப்புடன் இருங்கள்,



மதிப்பிற்குரிய ஸ்டீஃபன் லீச்சா
கல்வி அமைச்சர்